**தலைப்பு 110 - நீதி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 110 - நீதி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 11 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 874.76 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 774.39 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 100.37 மில்லியன் அதாவது 11.47 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 764.22 | 685.85 | 78.37 | 10.25 |
| மூலதனம் | 110.54 | 88.54 | 22.00 | 19.90 |
| மொத்தம் | 874.76 | 774.39 | 100.37 | 11.47 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 11001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 21.0 | 14.5 | 7.2 | 47.8 | 75.0 | 41.7 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2.6 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0016/0086/000 | 2.3 |
| 6000/0000/00/0013/0093/000 | 0.3 |
| | 2.6 |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

நீதி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அமைச்சினால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | இழப்புகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ii) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (iii) | மின்சார உபகரணங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (iv) | கடன் மற்றும் முற்பணப் பதிவேடு | 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை |

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

11001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,678,797 ஆக இருந்ததுடன் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 1,748,014 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 01 வருடம் முதல் 24 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 930,783 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதிகள் 2016 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சினால் அவ்வறிக்கை 2016 யூலை 12 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

**3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | |
| (அ) XII ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பிரிவு | 2,171,887 | மேலதிக செயலாளர் (சட்டம்) உத்தியோகத்தரின் சம்பளமற்ற கல்வி விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தும், பின்னர் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்து அவ்விடுமுறை |

| | | |
|---|---|---|
| | | சம்பளத்துடனான விடுமுறையாகக் கருதி சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) XII ஆம் அத்தியாயத்தின் 16.9 ஆம் பிரிவு | - | சம்பளமற்ற விடுமுறை பெற்றுள்ள உத்தியோகத்தரொருவருக்கு அந்த விடுமுறைக் காலத்தில் ஏற்பட்ட எந்தவொரு வெற்றிடத்திற்கும் பதவியுயர்விற்காக கவனத்தில் கொள்ளப்பட முடியாதிருந்த போதிலும், உதவிச் செயலாளராக (சட்டம்) செயற்படாதிருந்த உத்தியோகத்தர் சம்பளமற்ற விடுமுறைக் காலத்தில் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிக்கும் மேலதிக செயலாளர் (சட்டம்) பதவிக்கும் பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. |

### 3.5 நட்டமும் இழப்பும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்புத் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சர்வதேச இணக்கப்படுத்தல் நிலையமொன்றை உருவாக்குவதற்கு உலக வர்த்தக நிலையத்தின் 06 ஆவது மாடிக்குப் பதிலாக 22 ஆவது மாடிக்குக் கொண்டு செல்லப்பட்டமையால் ரூபா 5,395,488 தொகையான மேலதிக வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சர்வதேச இணக்கப்படுத்தல் நிலையத்தை உருவாக்குவதற்காக கட்டிடமொன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. அக்கட்டிடத்திற்காக 36 மாத காலத்திற்கு வாடகையாக ரூபா 69,404,229 தொகையும் சேவைக் கட்டணமாக ரூபா 14,436,576 தொகையும் ஆக ரூபா 83,840,805 தொகை தனியார் கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்திலிருந்து அமைச்சினால் எந்தவொரு சேவையும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.6 செயலாற்றல்

அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 25 மாவட்டங்களின் 329 மத்தியஸ்த சபைகளுக்காக 2015 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற பிணக்குகள் மற்றும் அந்தப் பிணக்குகளில் தீர்வுக்குக் கொண்டுவரப்பட்ட செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 2015 சனவரி 01 இல் உள்ளவாறு தீர்ப்பதற்காகக் காணப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை | | 86,297 |
| மீளாய்வாண்டில் தீர்ப்பதற்காகக் கிடைத்த பிணக்குகளின் எண்ணிக்கை | | 144,783 |
| தீர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட மொத்த பிணக்குகளின் எண்ணிக்கை | | 231,080 |
| <u>கழி</u> | | |
| தரப்பினர்கள் சமூகமளிக்காமையின் அடிப்படையில் நீக்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை | 5,959 | |
| நிராகரிக்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை | 61,065 | |
| வாபஸ் பெறப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை | 5,663 | <u>(72,687)</u> |
| மத்தியஸ்த சபையில் தீர்க்கக்கூடிய பிணக்குகளின் எண்ணிக்கை | | 158,393 |

| | |
|---|---|
| 2015 ஆம் அண்டில் தீர்க்கப்பட்ட பிணக்குகளின் எண்ணிக்கை | (59,961) |
| 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் தீர்ப்பதற்கு இருந்த பிணக்குகளின் எண்ணிக்கை | 98,432 |

329 மத்தியஸ்த சபைகளுக்காக தீர்மானிக்கப்பட்ட மொத்த பிணக்குகளின் எண்ணிக்கையில் 37.8 சதவீதம் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 34 | 24 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 08 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 176 | 163 | 22 | 09 |
| (iv) | ஆரம்ப நிலை | 113 | 76 | 37 | - |
| | மொத்தம் | 333 | 271 | 71 | 09 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டாம் நிலைக்குரிய 07 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளும், 02 அபிவிருத்தி உதவியாளர் பதவிகளும் ஆக 09 பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிகையை விஞ்சி மிகையாகக் காணப்பட்டது. அந்த மிகையான பதவியணியினர்களுக்காக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) நூலகர் பதவி சில வருடங்கள் முதல் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் நூலகப் புத்தகப் பயன்பாட்டின் போது உத்தியோகத்தர்களுக்கு மிகவும் வசதியீனங்கள் காணப்பட்டன. சட்ட விடயங்களுக்குரிய மிகவும் பெறுமதியான 3,125 புத்தகங்கள் இந்த நூலகத்தில் காணப்படுகின்றமை பயன்பாட்டுப் பதிவேட்டின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் நூலகத்திற்கு பொறுப்பாக உத்தியோகத்தரொருவர் காணப்படாமை அவ்வளங்களை பயன்படுத்துவதற்கு இடையூறாக இருந்தது.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தகவல்களின் பிரகாரம் 06 குழாய்நீர் தொழில்நுட்ப பதவிகளும், 05 மின்தொழில் நுட்பவியலாளர் பதவிகளும், 05 கொத்தனார் பதவிகளும் மற்றும் 05 தச்சு வேலை பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. எனினும், தற்போது அமைச்சில் காணப்படுகின்ற கட்டிடங்களைப் பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் உயர் நீதிமன்றத் தொகுதி முகாமைத்துவ சபையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமையால் இந்த பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் அமைச்சின் பணிகளை நிறைவேற்றுவது தொடர்பில் தாக்கமளித்திருக்கவில்லை.